தென்காசி – வீரகேரளம்புதூரில் – சாலை விபத்தில்

# உயிரிழந்த மூவர் குடும்பத்துக்கு தலா ரூ. 2 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக 29-

தென்காசி மாவட்டம், வீரகேர ளம் புதூர், சுரண்டை பகுதி1 கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த வர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தென்காசி மாவட்டம் மற்றும் வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தி லிருந்து வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை காவல் சரகம், ஆணைகு ளம் கிராமத்திற்கு இன்று (28.8.2024) காலை சுமார் 06.00 மணியளவில் விவசாய வயல் வேலைக்காக 17 நபர் கள் நான்கு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது வீரகேரளம் புதூர், சுரண்டை பகுதி-1 கிராமம், வாடியூர் மேல்புறம் சாலையின் வளை வில் திரும்பும்போது எதிர்பாராதவித மாக நான்கு சக்கர வாகனம் தனது கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், வாகனத்தில் பயணம் செய்த தென்காசி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமம், பள்ளிக் கூடத் தெருவைச் சேர்ந்த திருமதி. வள்ளியம்மாள் (வயது 60) க/பெ. மாடசாமி, திருமதி.பிச்சி (வயது 60) க/பெ.தங்கமணி மற்றும் திருமதி. ஜானகி (வயது 52) க/பெ.ஆறுமுகம் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்த மும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து தென்காசி அரசு மருத்து வமனையில் சிகிச்சை பெற்றுவரும் 14 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்க ளின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரி வித்துக் கொள்வதோடு, உயிரிழந்த வர்களின் குடும்பத்தின ருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# திரிபுராவில் கனமழை!

அகர்தலா, ஆக. 29–

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான திரிபுராவில் முன்னெப்போதும் இல்லாத வகையில், கடந்த வாரம் 19ந்தேதி முதல் கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து 5 நாட்கள் பெய்த கனமழையால், பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

எனினும், 24ந்தேதி முதல் மழை சற்று குறைந்தது. ஆனால், வெள்ளம் தொடர்ந்து குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்து மக்களின் வாழ்க்கையை பாதித்தது.

கனமழை மற்றும் வெள்ளத்திற்கு 31 பேர் பலியாகி விட்டனர். இதனை திரிபுரா நிவாரண, புனரமைப்பு மற்றும் பேரிடர் மேலாண் துறை தெரிவித்து உள்ளது.

திரிபுராவில், 492 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, வெள்ள பாதிப்புக்கு ஆளான மக்களுக்கு புகலிடம் வழங்கப்பட்டு உள்ளது. எனினும், வெள்ள பாதிப்பினால், 72 ஆயிரம் பேர் தங்களுடைய இடங்களை விட்டு வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் விஷ்வாஸ் பள்ளியின் தலைவர் திருமதி.கமலா காந்தி ஆகியோரின் ஐம்பதாவது திருமண நாளை முன்னிட்டு இராணிப்பேட்டை விஸ்வாஸ் பள்ளியில் 25 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கினார்கள். மற்றும் மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா, இராஜேஸ்வரி மருத்துவமனை டாக்டர் ராஜேஷ்வரி, ஷீலா வினோத் காந்தி, சங்கீதா சந்தோஷ், மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் நல அலுவலர் பூ.சரவண குமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர். விழா முடிவில் தலைமை ஆசிரியர் ஆர்.சரண்யா நன்றியுரை ஆற்றினார்.

ஆக.31 – செப். 1 ஆகிய 2 நாட்களில் நடக்கிறது! அட்டவணை வெளியீடு

# சென்னையில்: பார்முலா 4 கார் பந்தயம்!

## இந்தியாவிலேயே முதன் முதலில் இரவு ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டி!

சென்னை,ஆக.29-

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) மூலம் சென்னை ஃபார்முலா 4 ரேசிங் சர்க்யூட் போட்டி மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் கார் பந்தயத்தை நடத்த உள்ளது. வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இந்தியாவில் முதன் முதலில் இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் பந்தயத்தை நடத்த உள்ளது. இதன் மூலம் தெற்காசியாவிலேயே இரவு ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நடத்தும் முதல் நகரமாக சென்னை திகழ்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

3.5 கிமீ சுற்றளவு கொண்ட சர்க்யூட்டில் இப்பந்தயம் நடத்தப்படுகிறது. இந்த சர்க்யூட் தீவு திடல், போர் நினைவுச்சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தா சாலை மற்றும் மவுண்ட் ரோடு ஆகியவற்றில் அமைந்துள்ளது. இது தெற்காசியாவிலேயே மிக நீளமான ஸ்ட்ரீட் சர்க்யூட் எனபது குறிப்பிடத்தக்கது.

**ஆகஸ்டு 31 ஆம் தேதி நடைபெறும் போட்டிகளின் கால அட்டவணை பின்வருமாறு:**

| நேரம் | பந்தயம் | பிரிவு |
|---|---|---|
| 14.30 | JK FLGB F4 | பயிற்சி – 1 |
| 15:10 | F4 INDIAN | பயிற்சி – 1 |
| 15:50 | IRL – DRIVER A | பயிற்சி |
| 16:30 | JK FLGB F4 | பயிற்சி –2 |
| 17:10 | F4 INDIAN | பயிற்சி –2 |
| 17:50 | ENTERTAINMENT | சாகச நிகழ்ச்சி |
| 18:30 | IRL – DRIVER B | பயிற்சி |
| 19:10 | F4 INDIAN | தகுதிச் சுற்று –1 |
| 19:25 | F4 INDIAN | தகுதிச் சுற்று –2 |
| 19:45 | JK FLGB F4 | தகுதிச் சுற்று |
| 20:30 | IRL – DRIVER B | தகுதிச் சுற்று |
| 21:00 | All | பந்தயம் நிறைவு |

| நேரம் | வகுப்பு | பிரிவு |
|---|---|---|
| 14:30 | IRL | ஓட்டுநர் தகுதிசுற்று –A |
| 15:55 | JK FLGB 4 | பிட் லைன் திறப்பு |
| 16:05 | JK FLGB 4 | பந்தயம் –1 |
| 16:50 | F4 INDIAN | பிட் லைன் திறப்பு |
| 17:05 | F4 INDIAN | பந்தயம் –1 |
| 17:50 | IRL | பிட் லைன் திறப்பு |
| 18:05 | IRL | பந்தயம் –1 – ஓட்டுநர் –A |
| 18:45 | ENTERTAINMENT | சாகச நிகழ்ச்சி |
| 19:55 | JK FLGB 4 | பிட் லைன் திறப்பு |
| 20:05 | JK FLGB 4 | பந்தயம் –2 |
| 20:50 | F4 INDIAN | பிட் லைன் திறப்பு |
| 21:05 | F4 INDIAN | பந்தயம் –2 |
| 21:50 | IRL | பிட் லைன் திறப்பு |
| 22:05 | IRL | பந்தயம் –2 – ஓட்டுநர் –B |
| 22:45 | ALL | பந்தயம் நிறைவு |

**கிராண்ட்ஸ்டாண்ட் இருக்கை விவரங்கள்:**


| கிராண்ட்ஸ்டாண்ட் | இடம் | வாகன நிறுத்துமிடம் | நுழைவு அனுமதி |
|---|---|---|---|
| கிராண்ட்ஸ்டாண்ட்–1 | அண்ணா சாலை (முத்துசாமி பாலம் அருகில்) | MMC கிரிக்கெட் மைதானம் | பாக்ஸ் ஆபிஸ் 1 ( நுழைவு வாயில்–2 ) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–2 | சுவாமி சிவானந்தா சாலை | கலைவாணர் அரங்கம் | பாக்ஸ் ஆபிஸ் 3,4 மற்றும் 5 ( நுழைவு வாயில்–4 ) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–3 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–4 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–5 | | | |

**தீவுத்திடலில் உள்ள பார்வையாளர் மாடங்களின் விவரங்கள்**

| கிராண்ட்ஸ்டாண்ட் | இடம் | வாகன நிறுத்துடம் | நுழைவு அனுமதி |
|---|---|---|---|
| தங்கம் / பவளம் கிராண்ட்ஸ்டாண்ட் | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| HMR/ஸ்பான்ஸ்சர்கள் ஓய்வறை | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| பிரிமியம் ஓய்வறை | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |

**தடைசெய்யப்பட்ட பொருள்!**

பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தப் பொருளும் அரங்கிற்குள் அனுமதிக்கப்படாது. இந்த பொருட்களை சேமிப்பதற்கான எந்த ஏற்பாடும் இல்லை, மேலும் அவை அனைத்தும் பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பறிமுதல் செய்யப்படும், அவை திரும்பத் தரப்படமாட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்ற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார். உடன் சுற்றுலா ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குனர் சி. சமயமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை!

*காஞ்சிபுரம், ஆக. 29-*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள - மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களிடம் ஆலோசனை நடத்தினார்.*

*காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை -2024 யினை முன்னிட்டு, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.*

*கடந்த ஆண்டுகளில் பெய்த பெருமழையின் போது பாதிக்கப்பட்ட பகுதிகளை, 3 மிக அதிக பாதிக்கப்படும் பகுதிகள், 21 அதிக பாதிக்கப்படும் பகுதிகள், 26 நடுத்தர மற்றும் 22 குறைவாக பாதிக்கப்படும் பகுதிகள் என கண்டறியப்பட்டு மொத்தமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 பாதிக்கப்படும் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளது.*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் போது பாதிக்கப்படும் பகுதிகளில் மீட்புபணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 11 துறையைச் சார்ந்த அலுவலர்களைக் கொண்ட 21 மண்டலக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் இந்த குழுக்களின் பணிகளை கண்காணிக்க 21 துணை ஆட்சியர் நிலையிலான குழுத்தலைவர்கள் மற்றும் துணை குழுத் தலைவர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது.*

*மேலும் துறை வாரியாக மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடு பணிகள் குறித்து விரிவாக சம்மந்தப்பட்ட 11 துறை சார்ந்த அலுவலர்களிடம் விவாதிக்கப்பட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் இடர்கள் ஏற்படின் மேற்கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கைகள் விரைவில் முடிக்குமாறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.*

*மிக அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மூத்த குடிமக்கள், கருவுற்ற தாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் விவரங்களை முன்கூட்டியே பட்டியலிட்டு, மழை பொழிவின் போது அவர்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்து வந்து தங்க வைக்க தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாதுகாப்பு வசதிகளை முன்கூட்டியே ஆய்வு செய்து உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசரத் தேவைக்கான மருந்துகள், உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்டவைகளும், கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் உள்ளிட்ட பொருட்களையும், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களையும் முன்கூட்டியே கொள்முதல் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், மொபைல் நிறுவனங்களில் உயர்கோபுரங்கள், தகவல் தொழில் நுட்பங்கள் ஆகியவை செயல்படும் நிலையில் உள்ளதா என்பதை உறுதி படுத்திக் கொள்ள வேண்டும் என்று சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.*

*வெள்ளத்தினால் பாதிக்கப்படும் மக்களை தங்க வைக்க நிவாரண முகாம்கள் கண்டறியப்பட்டு, முகாம்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சார வசதிகள், வேட்டி மற்றும் சேலைகள், பாய், தலையணை, பெட்ஷிட், மளிகை பொருட்கள் இருப்பு, உணவு சமைப்பதற்கான இடம், சமையலர், சிலிண்டர் மற்றும் எரிவாயு பொருட்கள், மெழுகுவர்த்தி, டார்ச் லைட், ஜெனரேட்டர்கள் மற்றும் கழிப்பறை வசதிகள் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் உறுதி செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.*

*நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து மழைநீர் வடிகால்கள்,பாலங்கள் ஆகியவற்றை தூர்வாரும் பணியினை பருவமழைக்கு முன்னதாகவாகவே முடிக்குமாறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.*

*வெள்ளத்தினால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ளபாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் சுத்தம் செய்யும் பணி, மழைநீர் வடிகால்கள் அமைத்தல், விரிவுபடுத்துதல், உபரிநீர் கால்வாய்கள், நீர்வரத்து கால்வாய்கள் ஆகியவற்றினை தூர் வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பேரூராட்சி துறை, நகராட்சி நிருவாகம் ஆகிய துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காஞ்சிபுரம் மாவட்டத்தில், பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகம், பேரூராட்சிகள் துறை மற்றும் பல்வேறு துறைகளின் மூலமாக மழை வெள்ள பாதிப்புகளை தடுக்க போதிய உபகரணங்களை மற்றும் உயிர் காக்கும் கருவிகளை இருப்பு வைக்க அறிவுரை வழங்கப்பட்டது.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களான ஜெனரேட்டர், மரம் அறுக்கும் இயந்திரம்,MOTORPUMPS, மணல் மூட்டைகள், சவுக்கு கம்புகள், மின் கம்பங்கள், ஆம்புலன்ஸ், JCB இயந்திரம், ரப்பர் படகுகள் மற்றும் மதிவைப் படகுகள், LIFE BOYS, LIFEJACKET மற்றும் டார்ச் லைட் ஆகியவைற்றை போதுமான அளவில் தயார் நிலையில் வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர்காக்கும் மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.*

*குடிநீர் செல்லும் குழாய்களில் ஆரம்பம் முதல் இறுதி வரை குளோரினேற்றம் செய்யப்பட்ட நீர் செல்கிறதா என்பதையும் உறுதி செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து OHTஆபரேட்டர்களுக்கு உரிய அறிவுரைகள் மற்றும் பயிற்சிகளை வழங்க வேண்டும் என்றும் அறிவித்தப்பட்டது. மேலும், வடக்கிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அனைத்து துறை அலுவலர்கள், தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.*

*இவ்ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.ஆர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர்கள் மலர்கொடி குமார், எஸ்.டி.கருணாநிதி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.*

தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*சென்னை,ஆக.29-*

*தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 6-9-2024 வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கத்தில்” எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூரணசங்கீதாசின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.*

*இக்கூட்டத்தில் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை மற்றும் தமிழினத் தொன்மைகளையும் பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் ஆகிய கொள்கைகளைக் பரப்புரைச் செய்திடவும், மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளை வழங்கிடவும் தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் கல்வி நிலையங்களில் அமைக்கப்பட உள்ள “தமிழ் மாணவர் மன்ற” சேர்க்கை விண்ணப்பப் படிவம் மற்றும் மன்ற அடையாள அட்டையினை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களிடம் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.*

*அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: 1) கல்வி நிலையங்களில் “தமிழ் மாணவர் மன்றம்” அமைப்பு ஏற்படுத்துதல்;*

*2) ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்புக்கான மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்துவது - குறித்து.*

*இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*